தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பெங்களூரில் நாளை இயற்கை விவசாயம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம்

டிச. 25-ஆம் தேதி இயற்கை விவசாயம் குறித்த கலந்தாய்வு கூட்டம் ராம்நகரில் நடைபெற உள்ளது. இது குறித்து செவ்வாய்க்கிழமை அதிசுன்சினகிரி மடத்தின் ஆலோசகர் அமர்நாராயண் செய்தியாளர் களிடம் கூறியது: கர்நாடக மாநிலம் ராம்நகர் அர்ச்சகர்ஹள்ளியில் உள்ள அதிசுன்சினகிரி மட வளாகத்தில் டிச. 25-ஆம் தேதி இயற்கை விவசாயம் பற்றி கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தில் இயற்கை விவசாயம் பற்றிய பல்வேறு ஆலோனைகள் விவசாயிகளுக்கு கூறப்படும். இதற்கான ஏற்பாடுகளை அதிசுன்சினகிரி மடத்தினருடன் இணைந்து விவர் கிரீன் இயற்கை விவசாய அமைப்பு செய்து வருகிறது. கலந்தாய்வுக் கூட்டத்தை அதிசுன்சினகிரி மடாதிபதி நிர்மலானந்தா சுவாமிகள் தொடக்கி வைக்கிறார். கடந்த ஆண்டு பெங்களூரு விஜயநகரில் உள்ள அதிசுன்சினகிரி மடத்தில் ஏற்பாடு செய்த இயற்கை விவசாயம் பற்றி கலந்தாய்வுக் கூட்டத்தில் பெருவாரியான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். அதுபோலவே ராம்நகரில் நடைபெற உள்ள கலந்தாய்வுக் கூட்டத்தில் 1500 க்கும் அதிகமான விவ்சாயிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதே போன்று கலந்தாய்வுக் கூட்டம் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

## இணையதள வர்த்தக முறையில் விவசாயப் பொருள்: ஸ்நாப்டீல் தொடங்கியது

snapdeal.com

விவசாயிகள் பயன்பெறும் வகையில் இணையதள வேளாண் விற்பனையகத்தை ஸ்நாப்டீல் நிறுவனம் தொடங்கியது. இணையதள வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஸ்நாப்டீல் நிறுவனத்தின் துணை நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான குணால் பெஹல் இது தொடர்பாக புது தில்லியில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருக்கும் விவரம்: விவசாயிகளின் பயன்பாட்டுக்காக, இணையதள வர்த்தக அடிப்படையில் "அக்ரி ஸ்டோர்' தொடங்கி யுள்ளோம். இதன் மூலம் விதைகள், உரம், விவசாய இயந்திரங்கள் உள்ளிட்ட பிற பொருள்களை வாங்க இயலும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நமது வேளாண் துறையினரும் தங்களது அன்றாடத் தொழிலில் பயன்படுத்தும் விதமாக இந்த இ-விற்பனையகத்தை அமைத்துள்ளோம். மொபைல்போன் வழியாகவும் இந்த இ-விற்பனை மையத்திலிருந்து பொருள்களைப் பெறலாம். அடுத்த சில வாரங்களில் மேலும் பல வேளாண் பொருள்கள் இ-வர்த்தக முறையில் விற்பனைக்கு கொண்டு வரவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். 2010-ஆம் தொடங்கப்பட்ட ஸ்நாப்டீல் இ-வர்த்தக நிறுவனத்தின் 60 சதவீத வர்த்தகம் மொபைல்போன் வழியாக நடைபெறுகிறது.

## மஞ்சள் கிழங்கு விளைச்சல் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி

ஆண்டிபட்டி பகுதியில் மஞ்சள் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆண்டிபட்டி அருகே தெப்பம்பட்டி, சித்தார்பட்டி மற்றும் கோத்தலூத்து உள்ளிட்ட பல்வேறு

பகுதிகளில் மஞ்சள் கிழங்கு பயிரிடப்படுகிறது. சமீபத்தில், நன்கு மழை பெய்ததால், மஞ்சள் கிழங்குகள் விளைந்து, தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இந்த மஞ்சள் கிழங்குகள், தைப் பொங்கலுக்கு அதிக அளவில் தேவைப்படும் என்பதால், இவற்றை அறுவடை செய்யாமல் அப்படியே விட்டுவைத்துள்ளனர். தைப் பொங்கலின்போது பறிக்கப்படும் இந்த மஞ்சள்கள், ஆண்டிபட்டி, தேனி மற்றும் மதுரை சந்தைகளில் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## <u>மஞ்சள் பயிரில் இலை கருகல் நோயை கட்டுப்படுத்த யோசனை</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரை தாக்கியுள்ள இலைக் கருகல் நோயை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து, அதிக பனிப்பொழிவு இருப்பதால், மஞ்சள் பயிரானது இலைக் கருகல் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இலைக் கருகல் நோய் என்பது டேப்ரினா மேக்குலன்ஸ் எனும் பூஞ்சை மூலமாக ஏற்படுகிறது. இப்பூஞ்சையானது அக்டோபர், நவம்பர் மாதங்களில் நிலவும் சாதகமான சூழ்நிலையில் மஞ்சள் பயிரைத் தாக்கும். இதனால், இலைகளில் வெளிர் மஞ்சள் நிற திட்டுக்கள் உருவாகி, பின்னர் பழுப்பு நிறமாக மாறும். காற்றின் மூலம் பரவக்கூடிய பூஞ்சை விரைவாகப் பெருகி நோய் பரப்பும் தன்மை கொண்டது. இதைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை அறுவடை செய்து எரித்துவிட வேண்டும். பின்னர், காப்பர் ஆக்ஸிகுளோரைடு பூஞ்சாணக் கொல்லி பவுடரை 1 லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற அளவில் அல்லது புரோபிகோனசோல் பூஞ்சாணக் கொல்லி மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 1 மி.லி அளவில்

கலந்து இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். மேலும், தற்போது மஞ்சள் கிழங்குகள் பெருக்கும் தருணத்தில் உள்ளதால், இதற்கு நுண்ணூட்டச்சத்து அளித்தால் கிழங்கின் நிறம் மற்றும் அளவு அதிகரிக்கலாம். இதற்கு, 6 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து, காலையில் தெளிந்த நீரை வடிகட்டி அதனுடன் சிங்க் சல்பேட், பெரஸ் சல்பேட், மக்னீசியம் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியா ஒவ்வொன்றும் முறையே 150 கிராம் சேர்த்து கரைத்துக் கொள்ள வேண்டும். இதனுடன், 75 லிட்டர் தண்ணீர் சேர்த்து 100 லிட்டர் கரைசலாக தயார் செய்து 1 ஏக்கருக்கு தெளிக்கலாம். இத்துடன், எவ்விதமான பூச்சிக்கொல்லியோ, பூஞ்சாணக் கொல்லியோ கலந்து தெளிக்கக் கூடாது.

## <u>பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 83.46 அடி</u>

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 83.46 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,101 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்து விடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 17.5 டி.எம்.சி.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>ஆர்வம் இருந்தால் பட்டுப் புழுவில் லாபம் பார்க்கலாம்</u>



போதுமான அளவிற்கு காற்று இல்லாத இடம், அதிகளவில் பனிகொட்டும் பகுதியில் பட்டுப்புழு வளர்ப்பது இயலாதகாரியம் என்பதால் மலைஅடிவாரங்களில் வசிக்கும் விவசாயிகள் இந்த தொழிலில்

ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் பழநி அருகே பாலசமுத்திரம் பகுதியை சேர்ந்த விவசாயி எஸ்.செல்லமுத்து 37. காற்று குறைவான, பனிபெய்து கொண்டே இருக்கும் இடத்தில் இரண்டு ஆண்டுகளாக பட்டு புழுக்களை வளர்த்து சாதனை விவசாயி என்பதை நிரூபித்துள்ளார். **விவசாயி செல்லமுத்து கூறியதாவது**:" மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரம் பாலாறு- பொருந்தலாறு அணைப்பகுதியை ஒட்டியுள்ள பாலசமுத்திரத்தில் ஆண்டு முழுவதும் நெல், கரும்பு, மக்காச் சோளம் மற்றும் காய்கறிகள் பயிரிடப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்பதற்கான சாத்தியகூறுகள் இல்லாததால் விவசாயிகள் அந்த தொழிலை மேற்கொள்ள முன்வரவில்லை. தமிழ்நாடு பட்டு புழு வளர்ப்பு களப்பணியாளர்கள் என்னை தொடர்புகொண்டு அரசு மானியத்தொகை உதவியுடன் பட்டு புழு வளர்த்தால் நல்ல வருமானம் ஈட்டலாம் என ஆலோசனை அளித்தனர். அதன்படி ஓசூரிலுள்ள அரசு பட்டுபுழு வளர்ச்சி மையத்தில் 5 நாட்கள் பயிற்சி எடுத்தேன். அரசு வழங்கிய நடவு மானியம் ரூ.8 ஆயிரம், கூரை அமைக்க மானியம் ரூ.80 ஆயிரத்தை அடிப்படையாகக் கொண்டு 1.5 ஏக்கரில் மல்பேரி செடிகள் வளர்த்து அதன் அருகே கூடாரம் அமைத்து பட்டுபுழுக்களை வளர்த்து வருகிறேன். நரிக்கல்பட்டி, பொள்ளாச்சி, கோத்தனூர் பகுதிகளில் பட்டுபுழுக்கள் வளர்க்கின்றனர். அவர்களிடமிருந்து ஏழுநாட்களான 100 முட்டையை ரூ.2000 த்திற்கு வாங்கி வந்து மல்பேரி செடியில் விட்டுவைப்போம். "டேபிள்பேன்' மற்றும் "ஹீட்டர்' உதவியுடன் பட்டுபுழுவளர்ச்சிக்கு தேவையான 24 டிகிரி செல்சியஸ் வெப்பம் இருக்கும் வகையில் கவனமாக பார்த்து வளர்த்து வருவதால் 100 முட்டைகளில் இருந்து 90 கிலோ பட்டு கூடுகள் கிடைத்து வருகிறது. இவற்றை பெங்களூருவில் விற்பனை செய்கிறேன். கிலோ ரூ.350 முதல் ரூ.500 வரை பட்டு கூடுவின் தரத்திற்கு ஏற்றவாறு ஏலம் கேட்கின்றனர். மல்பேரி செடிகளை மாட்டு சாணம், ஆட்டு உரமிட்டு நிறைய தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும். அதை விரும்பி தின்னும் புழுக்கள் 23

நாட்களில் கூடுகட்டி விடும். இத்தொழிலில் கவனத்துடனும், ஆர்வத்துடனும் ஈடுபட்டால் ஆரம்ப முதலீட்டை இரண்டு ஆண்டுகளில் எடுத்துவிடலாம். நல்ல வருமானமும் கிடைக்கும்,' என்றார். இவருடன் பேச 98426 50151. **-சி.முருகன், பழநி.**

**<u>நவீன தொழில்நுட்பம்</u>**



எரிசக்தி காடுகள் : மரம் ஒரு எரிசக்தி நிலையமாகும். நம் நிலத்தில் இப்போது பத்தில் ஒரு பகுதிக்குத் தான் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் தேவைப்படும் அளவோ மூன்றில் ஒரு பங்கு ஆகும். தொன்றுதொட்டு தாவரங்களே கால்நடைகளை வளர்த்து வருகின்றன. கால்நடைகள் உண்ணும் தாவரம் எதுவானாலும் அதில் குறைந்தது 10 சத அளவிலாவது புரதமும், தக்க அளவில் வைட்டமின்களும், சுண்ணாம்புச் சத்தும் இருக்கும். அகத்தி, சுபாபுல் ஆகியவற்றின் தழைகள் புரதச்சத்துடையதால் பால் கறவையை அதிகரிக்கும். பண்ணை நிலத்தின் பயிருடன் சேர்த்து மரங்களை வளர்ப்பது கால்நடைகள் வளர்ப்பை மேற்கொள்வது ஆகிய ஒருங்கிணைந்த வேளாண் முறையைக் கடைப்பிடிப்பதற்கு உற்பத்தியை பன்மடங்காகப் பெருக்குவதற்கும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான ஆற்றலைப் பெறுவதற்கும் வேளாண் காடுகள் முறை உதவும். எரிசக்தி காடுகளுக்கு ஏற்ற மரங்கள் : குறைந்த காலத்தில் துரிதமாக வளர்ந்து கால்நடைத் தீவனம், எரிபொருள் மரக்கட்டை கூளைக்கொடுக்கக்கூடிய உணவுப் பயிர்களுடன் ஒத்து வளரக்கூடிய மரங்களையே எரிசக்தி காடுகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். வேலமரம், சவுண்டல், கிளைரி சிடியா, கல்யாண முருங்கை போன்றவற்றை அடிக்கடி பசுந்தீவனத்திற்காக வெட்டினாலும் விரைவில் வளரக்கூடியதாகவும், கல்யாண முருங்கை, கிளைரிசிடியா, அகத்தி போன்ற காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து, மண்ணில் சேமித்து வைக்கக்கூடியதாகவும் உள்ள தைலமரம், சவுண்டல் போன்ற தரையின்

ஆழ்மட்டத்தில் உள்ள ஊட்டச்சத்துக்களை கிரகிக்கும் தன்மை உடையதாகவும் இருக்க வேண்டும். எரிசக்தி காடுகளின் பயன்கள் : விறகின் வெப்ப ஆற்றலைக் கொண்டு பல தொழிற்சாலைகளின் எரிசக்தி தேவையை நிறைவு செய்வதோடு மின் சக்தியாக மாற்றியும் பயன்படுத்தலாம். குஜராத்தில் கட்ச் பகுதியில் 4.4 டன் விறகை எரித்தால் ஒரு மெகாவாட் மின்சக்தி பெறலாம் என அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். கிராமப்புறங்களில் 10-15 கிராமங்களுக்கு 365 ஏக்கரில் சுபாபுல், அகத்தி, சவுக்கு, யூகாலிப்டஸ் ஆகிய மரங்களைப் பயிரிட்டு மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்யலாம். அரசமரம் 14 ஆண்டுகளில் சுமார் 62 கிலோ கிராம் எரிபொருளைத் தருகிறது. சவுண்டல் மரங்களில் ஒருவகையான "ஹவாயின் ஜெயண்ட்' என்ற ரகம் விரைவில் வளரக்கூடிய திறன் கொண்டது. பன்னோக்கு மரங்கள் : எரிபொருள், நார்பொருள் தீவனம், எண்ணெய்வித்து, உண்ணக்கூடிய பழங்கள் போன்ற பல நோக்கங்களுக்காக வளரக்கூடிய மரங்கள் பன்னோக்கு மரங்கள் எனப்படும். பசுந்தீவனங்கள் : பசுந்தீவனங்களில் உயிர்ச்சத்துக்கள் அதிகம் இருப்பதால் கலப்பு உணவின் தேவைகளை இலைகள் குறைக்கின்றன. ஐந்து லிட்டர் வரை பால் கறக்கும் ஒரு மாட்டிற்கு தேவையான பசும்புல் மட்டுமே அளித்து அதனை நன்கு வளர்க்க முடியும். இதற்கு கலப்பு தீவனம் எதுவும் தேவையில்லை. பசுந்தீவனத்தில் உள்ள கெரோட்டின் உயிர்ச்சத்து கால்நடைகளின் வைட்டமின் "ஏ' தேவையினை பூர்த்தி செய்கிறது. வேளாண் பயிர்களோடு சுபாபுல், கிளைரிசிடியா, கொடுக்காப்புளி, அகத்தி, பூவரசு, வாகை போன்ற மரங்கள் தீவனத்தையும் எரிபொருளையும் சேர்த்து அளிக்கின்றன. இம்மரங்களை நிலங்களின் ஓரத்தில் வளர்த்தால் கால்நடை தீவனத்தோடு மண் அரிப்பைத் தடுத்து மண்வளத்தைப் பாதுகாக்க இயலும். தாவரங்களிலிருந்து தரமான நிறங்கள் : சுபாபுல், அகத்தி போன்ற மர இலைகளை வெயிலில் உலர வைத்து அரைத்து கோழித்தீவனத்தின் ஒரு பகுதியாக சேர்ப்பதன் மூலம் தீவனச்செலவு குறைவதோடு, முட்டையின் மஞ்சள் கரு அதிக மஞ்சள் நிறம்

கொண்டதாக விளங்குகிறது. கார்பன் சந்தை : எரிசக்தி காடுகளை உருவாக்குவதன் மூலம் கரித்தடத்தைக் குறைக்கலாம். கரித்தடம் என்பது ஒருபொருளை உற்பத்தி செய்வதற்கான ஒரு தனிமனிதனோ அல்லது நிறுவனமோ மொத்தமாக வெளியிடப்படும் நச்சு வாயுக்களின் அளவினை கரியமில வாயுவில் புவி வெப்பமாக்கும் காரணிக்கு இணையாகக் கணக்கிடப்படுவது ஆகும். மரம் வளர்ப்பின் மூலம் இந்த கரித்தடத்தை குறைத்து அதன் மூலம் உலகம் வெப்பமயமாதலும் குறைக்கப்படுகிறது. தகவல் : முனைவர்கள் சு.புகழேந்தி, ர.ஷாலினி, கு.பூபதி, சி.ராமஜெயம், மா.சிங்காரவேலு, உயிர்சக்தி துறை, வேளாண் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 002. போன் : 0422 - 661 1276.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>தீவன மரம் பசுந்தீவன உற்பத்தி மூலம் கால்நடை வளர்ப்பு</u>**

கால்நடை வளர்த்தால் தான் விவசாயிகள் நீடித்த வேளாண்மையை எளிதில் செய்யலாம். நல்ல லாபம் தரும் காய்கறிகள், பழங்கள் மூலம் வருமானம் பெறுவதை விட தீவன மரங்கள், பசுந்தீவன வகை தாவரங்களையும் தனியாகவோ, வரப்புப் பயிராகவோ கலப்பு பயிராகவும் வளர்க்கலாம். வேலிப் பயிராகவும் பராமரித்தால் லாபம் உண்டு. ஒரு ஏக்கர் பரப்பில் 16000 கிலோ சவுண்டல் எனும் மரப்பயிர் தீவனம் தரும் போது நிறைய ஆடுகள் வளர்க்க வாய்ப்பும் உள்ளது. இவை தவிரவும் கிளரிசிடியா, மல்பரி, பூவரசு, வாதநாராயணன், மரங்கள் பசுந்தீவனம் நிலையாக பெற உதவும். பில்லிப்பிசரா, சணப்பை, கொள்ளு, பயறு வகைகள் எல்லாம் நிறைய தீவனம் தரும் வகைகள் தான். தீவன மரம் வளர்ப்பது எளிது. குறிப்பாக அகத்தி, செடி முருங்கை மரங்கள் கூட பல நன்மைகள் பெற உதவுபவை. வறட்சி தாங்கி வளரும் கொழுக்கட்டைப்புல், எருமைப்புல், கம்பு நேப்பியர் புல், குதிரைவாலிபுல், அருகம்புல் முதலியன மேலும் உதவுபவை. உரிய இடம் இருந்தும் முறையாக திட்டமிட்டு கால்நடைகளை சேர்க்காமல் செய்யும்

விவசாயத்தால் நல்ல லாபம் வராது. கால்நடைகள் நிரந்தர வங்கிகளாக ஒருமுறை கடனாக வங்கியில்பணம் பெற்று ஆட்டுப்பட்டி கன்றுகள் பண்ணை வைத்தால் கூட ஒரே ஆண்டில் கை நிறைய காசு பார்க்கலாம். முடிந்த அளவு முயற்சித்தாலோ போதும். ஒரு ஏக்கர் உள்ள சிறு விவசாயி கூட 50 ஆட்டுக்குட்டிகள் அல்லது 10 கன்றுகள் வளர்த்து 6 மாதம் பராமரித்து விற்றால் கூட ரூ.50,000 தாராளமாக ஆண்டு வருமானம் லாபமாக பெறலாம். தொழில் முனைவோராக இதற்கு ஒருநாள் பயிற்சி மற்றும் நேரடி செயல்விளக்கம் வந்து கூட பயிற்சி தர வாய்ப்பும் உள்ளது. கால்நடை மூலம் பெறும் கழிவுகளையும் தரமான உரமாக்கி, மண்புழு குழியில் இட்டு மதிப்புக்கூட்டில் நல்ல மண்வளம் பேணுவது தான் இயற்கை வேளாண்மை இதற்கு நிறைய அரசு உதவிகள் உள்ளன. உங்கள் நிலத்தை இயற்கை விவசாயப் பண்ணையாக மாற்ற உரிய தொழில்நுட்ப உதவிகள் தரப்படுகிறது. சிறப்பு பயிற்சிகள் பெற விருப்பம் உள்ளவர்கள் 98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**- டாக்டர் பா.இளங்கோவன், உடுமலை, திருப்பூர் மாவட்டம்.**

## பயிர் பாதுகாப்பு பயிற்சி

திருவாலங்காடு: நெற்பயிரை தாக்கும் புகையான் நோயை கண்டறிந்து, அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து, விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி, வேளாண் துறையினர் அளித்தனர்.திருவாலங்காடு ஒன்றியத்தில், ஜாகீர்மங்கலம், காஞ்சிப்பாடி, வேணுகோபாலபுரம், கூளூர், வீரராகவ புரம் ஆகிய வருவாய் கிராமங்களில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நெற்பயிர் பயிரிட்டுள்ளனர்.

ஆலோசனை

சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரில், தற்போது, 30 நாட்கள் முதல், அறுவடை பருவம் வரை உள்ளது. இந்த நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதையடுத்து, திருவாலங்காடு ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர்

வெள்ளைபாண்டி தலைமையில், நேற்று, விவசாயிகளின் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், உதவி இயக்குனர் வெள்ளைபாண்டி பேசியதாவது: நெற்பயிரை தாக்கும் புகையான் நோயால், நெற்பயிர், தீப்பிடித்து எரிந்தது போன்று கருகி காணப்படும். தாக்குதல் திட்டுத்திட்டாக காணப்படும். வயலில் இறங்கி பார்த்தால், பயிரின் தூரில் புகையான் தத்துப்பூச்சிகள் இருப்பதையும், பறப்பதையும் காண முடியும்.

பூச்சிகொல்லிமருந்து

புகையான் நோய் தாக்கிய விவசாயிகள், முதலில், நிலத்தில் உள்ள நீரை முழுமையாக வெளியேற்ற வேண்டும். நன்கு சூரிய வெளிச்சம் படும்படி பயிர்களை விலக்கிட வேண்டும். தழைச்சத்து அளிக்கக்கூடிய யூரியா உரத்தினை முற்றிலும் தவிர்க்க வேண்டும். நெல் பயிர் தூரில், அடிப் பகுதியில் நன்குபடுமாறு பூச்சிக் கொல்லி மருந்தை கைத்தெளிப்பானில், 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பானாக இருந்தால், 80 லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். இப்படி செய்தால், புகையான் நோயில் இருந்து, நெல் பயிரை பாதுகாக்க முடியும். இவ்வாறு, அவர் பேசினார். நெல் பயிர் தூரில், அடிப்பகுதியில் நன்குபடுமாறு பூச்சிக் கொல்லி மருந்தை கைத்தெளிப்பானில், 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத் தெளிப்பானாக இருந்தால், 80 லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். இப்படி செய்தால், புகையான் நோயில் இருந்து, நெல் பயிரை பாதுகாக்க முடியும்.

## <u>மணிலா பயிரில் அதிக லாபம்</u>

திருவள்ளூர்: எண்ணெய் வித்து பயிர்களில் முக்கியமான மணிலா பயிரிட்டு, அதிக லாபம் சம்பாதிக்கலாம் என, வேளாண் துறையினர் தெரிவித்து உள்ளனர். திருவள்ளூர் மாவட்ட வேளாண் விதை

பரிசோதனை அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள அறிக்கை: எண்ணெய் வித்து பயிர்களில் முக்கியமான மணிலா, குறைந்த அளவு தண்ணீரில், குறைந்த நாட்களில், அதிக மகசூல் தரும். விதை செலவு அதிகம் என்பதால், செலவை குறைக்கும் வகையில், முளைப்புத் திறன் அறிந்து பயிரிடலாம். குறைந்தபட்ச முளைப்பு திறன் 70 சதவீதம் இருந்தால் மட்டுமே, அதிக செடி வளர்ந்து அதிக காய்கள் பிடிக்கும். எனவே மணிலா பயிரின் முளைப்புத் திறனை அறிய, ஒரு கிலோ விதை 30 ரூபாய் கட்டணத்துடன், திருவள்ளூர் ஆயில் மில் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள, விதை பரிசோதனை ஆய்வகத்தில் கொடுக்கலாம். 10 நாட்களில் பரிசோதனை முடிவுகள் கிடைக்கும். இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

## ரூ.1.18 கோடியில் வேளாண் கருவி

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில், நடப்பாண்டு மானியத்தில், வேளாண் கருவிகள் வழங்க, 1.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. இதன்படி, சிறு, குறு, பெண் மற்றும் இதர விவசாயிகளுக்கு, 446 கருவிகளுக்கு, 1.15 கோடி ரூபாயும், இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு, 23 கருவிகளுக்கு, 3.34 லட்சம் ரூபாயும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, சூரிய சக்தி மூலம் இயங்கும் வேளாண் பொருட்களை உலர்த்தும் கருவி, 50 சதவீதம் மானியத்தில் மூன்று பேருக்கு வழங்கப்பட உள்ளது. மேலும் விவரங்களுக்கு, திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரியில் இயங்கும், உதவி வேளாண் செயற்பொறியாளர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளுமாறு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் தெரிவித்து உள்ளார்.

## ரூ. 50 லட்சம் மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,060 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10 ஆயிரத்து 221க்கும், குறைந்த பட்சம், 7,409 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 7,890க்கும், குறைந்த பட்சம், 5,800 ரூபாய்க்கும் ஏலம்போனது.பனங்காலி ரகம், அதிக பட்சம், 14 ஆயிரத்து, 777க்கும், குறைந்த பட்சம், 10 ஆயிரத்து 819 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 50 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## இரண்டாம் பாசனத்துக்கு கே.ஆர்.பி., அணை திறப்பு

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, இரண்டாம் போக விவசாய பாசனத்திற்காக, இடது மற்றும் வலதுபுற கால்வாயில், தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, இரண்டாம் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட, தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் உத்தரவிட்டார். அதன்படி, மாவட்ட கலெக்டர் ராஜேஷ். நேற்று காலை அணையை திறந்து வைத்து கூறியதாவது:கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, இடது மற்றும் வலது புற பிரதான கால்வாய்களில், இரண்டாம் போக பாசனத்திற்காக, வரும், 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம், 9,012 ஏக்கர் பாசன வசதி பெறும்.கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையில் தற்போதுள்ள நீரை கொண்டும், வரும் பருவ மழையினால் கிடைக்கும், நீர் வரத்தை எதிர்நோக்கியும், அணையில் இருந்து இடது புற கால்வாய் மூலம், 80 கன

அடி நீர், வலது புற கால்வாய் மூலம், 75 கன அடி நீர் என, மொத்தம், வினாடிக்கு, 155 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம், கிருஷ்ணகிரி தாலுகாவுக்கு உட்பட்ட, 16 ஊராட்சிகளில் உள்ள, பெரியமுத்தூர், சுண்டே குப்பம், திம்மாபுரம், சௌட்டஅள்ளி, தளிஹள்ளி, கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, மிட்ட ஹள்ளி, எர்ரஹள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஹள்ளி, நாகோஜனஹள்ளி, ஜணப்பர அள்ளி மற்றும் பையூர் உள்ளிட்ட, 16 ஊராட்சிகளில் உள்ள நஞ்சை நிலம் பாசன வசதி பெறும்.கிருஷ்ணகிரி அணையின் இன்றைய (நேற்று) நீர்மட்டம், 49.90 அடியாக உள்ளது. விவசாயத்திற்காக திறந்து விடப்படும், கே.ஆர்.பி., அணையின் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும். நீர் பங்கீட்டு பணிகளில், பொதுப்பணித்துறைக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு தர வேண்டும். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு எக்காரணத்தை கொண்டும், பாசனத்திற்கு கால நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்கப்படாது.இவ்வாறு அவர் கூறினார். டி.ஆர்.ஓ., பாலசுப்பிரமணியன், கண்காணிப்பு பொறியாளர் பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், கிருஷ்ணகிரி ஆர்.டி.ஓ., சாந்தி, முன்னாள் எம்.எல்.ஏ., கோவிந்தராஜ், காவேரிப்பட்டணம் யூனியன் சேர்மன் ஜமுனா, அக்ரோ தலைவர் கிருஷ்ணன், டவுன் பஞ்சாயத்து தலைவர் வாசுதேவன், உள்பட பலர் பங்கேற்றனர்.

## <u>ரூ.54.25 லட்சம் மதிப்பில் வேளாண் பொருள் ஏலம்</u>

அந்தியூர் : அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, அத்தாணி, கோபி, பருவாச்சி, சென்னம்பட்டி, பர்கூர் உட்பட பல பகுதி விவசாயிகள், தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம் போன்ற விளை பொருட்களை கொண்டு வந்திருந்தனர். காலை முதல், 22 ஆயிரம் தேங்காய், 7.05 முதல், 21 ரூபாய், என, இரண்டு லட்சத்துக்கும்,

கொப்பரை தேங்காய், 40 மூட்டைகள், கிலோ, 75.15 முதல், 87.19 ரூபாய் வரை, 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.வெள்ளை ரக எள், 600 மூட்டைகள் கிலோ, 74.89 முதல், 109.69 ரூபாய் என, 36 லட்சத்துக்கும், மக்காச்சோளம், 40 மூட்டை, கிலோ, 10.89 முதல், 11.80 வரை, 40 ஆயிரம் ரூபாய்க்கும், புதன் கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 1,300 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது.பச்சை கடலை கிலோ, 17.00 முதல், 25 ரூபாய் வரையும்,காய்ந்தது, 34.21 முதல், 42 ரூபாய் வரை, 15 லட்சம் ரூபாய் என, மொத்தம், 54.25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது, என, விற்பனை கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

**இரண்டாம் போக பாசனத்துக்காக காலிங்கராயனில் தண்ணீர் திறப்பு**

பவானி : பவானி, காலிங்கராயன் வாய்க்காலில், ஆயக்காட்டு இரண்டாம் போக பாசனத்துக்காக தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடந்தது. ஈரோடு கலெக்டர் பிரபாகர் தலைமை வகித்தார். மொடக்குறிச்சி எம்.எல்.ஏ., கிட்டுசாமி, ஆவின் சேர்மன் ராமசாமி, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பவானி, மேட்டுநாசுவம்பாளையம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட காலிங்கராயன் பாளையம், காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து, தண்ணீர் திறக்கப்பட்ட பின், கலெக்டர் பிரபாகர் கூறியதாவது:பவானிசாகர் அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர், பவானி, காலிங்கராயன் வாய்க்கால், ஆயக்கட்டு இரண்டாம் போக பாசனத்துக்காக, 23ம் தேதி முதல் மே, 2ம் தேதி வரை காலிங்கராயன் வாய்காலின் முழு கொள்ளளவான, வினாடிக்கு, 584 கனஅடி திறந்துவிடப்பட்டு உள்ளது.இதன் மூலம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி போன்ற பகுதிகளில் நெல், 2,800, கரும்பு, 500, மஞ்சள், 1,800, வாழை, 196 ஹெக்டர் உட்பட மொத்தம்,

6,370 ஹெக்டர் பரப்பளவில், விவசாய நிலங்கள் பயன் பெறும். விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், மூன்று வேளாண்மை விரிவாக்க மையங்களில் தயார் நிலையில் உள்ளது, என்றார். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பெரியசாமி கூறியதாவது: ஈரோடு வட்டாரத்தில் பயிர் செய்து உள்ள முதல் போகமான இட்லி குண்டு, பி.பி.டி., பொன்னி போன்ற ரகங்கள் விளைச்சல் முடிந்து, அறுவடை பணி நிறைவு பெற்று வருகிறது.இன்று முதல் திறக்கப்படும் தண்ணீர் மூலம், இரண்டாம் போகமாக அம்பாசமூத்திரம்-16, இட்லி குண்டு, பி.பி.டி., பொன்னி போன்ற ரக நெல், பயிரிடப்படும், என்றார்.சித்தோடு டவுன் பஞ்., தலைவர் வரதராஜன், ஈரோடு ஆர்.டி.ஓ., மேனகா, வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ், கண்காணிப்பு பொறியாளர் வெங்கடாசலம், கீழ்பவானி வடிநில கோட்ட செயற்பொறியாளர் ராசு, பவானிசாகர் அணை கோட்ட செயற்பொறியாளர் நடராஜன், காலிங்கராயன் அணைகட்டு செயற்பொறியாளர் கார்த்திகேயன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### நெல் சாகுபடி அதிகரிப்பு; கூடுதல் டி.பி.சி., திறக்க முடிவு

ஈரோடு : விளைச்சல் அதிகரிப்பால், ஈரே ாடு மாவட்டத்தில் நடப்பாண்டு கூடுதல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும், என, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. தமிழகத்தில், கடந்த மூன்றாண்டுகளாக நிலவிய கடும் வறட்சியால், நெல், கரும்பு, மஞ்சள் மற்றும் எள் உள்ளிட்ட பயிர்களின் சாகுபடி, பாதியாக குறைந்தது.இந்தாண்டு வடகிழக்கு பருவமழை சிறப்பாக பெய்ததால், தமிழகத்தின் டெல்டா மற்றும், திருவண்ணாமலை, ஈரோடு மாவட்டம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும், நெல் சாகுபடி பல மடங்காக அதிகரித்துள்ளது.குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தின் டி.என்.பாளையம், கோபி மற்றும் கொடுமுடி உள்ளிட்ட பகுதிகளில், நெல் சாகுபடி, 30,000

ஏக்கருக்கு மேல் அமோகமாக உள்ளது. தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசன சாகுபடிக்கு, இந்தாண்டு, 16 நெல் கொள்முதல் நிலையங்கள் (டி.பி.சி) அமைக்கப்பட்டுள்ளது. கீழ்பவானி பாசனத்தில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்கள் பாசனப்பகுதியாக இருப்பதால், பெரும்பாலான பகுதிகளில், நெல் சாகுபடியே மேற்கொண்டுள்ளனர். இப்பகுதியில், கடந்தாண்டு, 20 நிலையங்களே அமைந்ததால், இந்தாண்டு கூடுதலாக, பத்து இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.குறிப்பாக, சிவகிரி, மூலப்பாளையம் நால்ரோடு உள்ளிட்ட பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.இதுபற்றி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) விஸ்வநாதன், "நெல் சாகுபடி அதிகரித்துள்ள தால், இந்தாண்டு கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. சாகுபடி அதிகளவில் இருப்பதால், விவசாயிகள் எந்த பகுதியில், கூடுதலாக வேண்டும் என்று கேட்கின்றனரோ, அந்த பகுதியில், குடோன் அமைத்து தர, உணவுக்கழகத்துக்கு, தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறுவடை சமயத்தில், ஜனவரி முதல், கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்," என்றார்.

## <u>விவசாயிகளுக்கு மூலிகை செடிகள்</u>

ஊட்டி : "தோட்டக்கலை துறை சார்பில், விவசாயிகளுக்கு மூலிகைச் செடிகள் வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் சங்கர் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடந்தது. மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி முன்னிலை வகித்தார்.இதில், விவசாய சங்கங்கள், தோட்டக்கலை இணை இயக்குனர் மற்றும் இதர துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்; விவசாய சங்க பிரதிநிதிகளிடம் இருந்து, 26 மனுக்கள் பெறப்பட்டன. இதில், ஆவின் நிறுவன அதிகாரிகள்,"பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையில் உள்ள பால்

பணம் உடனடியாக வழங்கப்படும்; கறவை மாடுகள் வாங்க, வங்கிகள் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, உறுதியளித்தனர். "மூலிகை செடிகள் பயிரிடும் விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தில், அதுகுறித்த விபரத்தை தெரிவித்தால், அவர்களுக்கு மூலிகைச் செடிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்தனர். "ஊட்டி நகராட்சியில், குடிநீர் வீணாவது மற்றும் தெரு விளக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என, நகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறை அதிகாரிகள் கூறுகையில், "கொல்லிமலை ஓரநள்ளி அரசு ஆரம்பப் பள்ளியை ஒட்டியுள்ள இடத்தில், தடுப்புச்சுவர் கட்ட தல ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது. "ஊட்டி - கைக்காட்டி சாலை, லவ்டேல் ரயில் நிலையம் அருகே, வேகத்தடை அமைக்கப்படும்' என, நெடுஞ்சாலை துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. கேத்தி பேரூராட்சி அதிகாரிள் கூறுகையில்,"கேத்தி - பாலாடாவில் உள்ள சிவ செந்தூரான் நகர், அம்பேத்கர் நகர் மற்றும் கரிப்பாலம் ஆகிய இடங்களில், எல்.இ.டி., விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவித்தனர்.

## <u>தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் கருவிகள் வழங்கல்</u>

தஞ்சாவூர் : தஞ்சாவூர் மாவட்டத்தில், 50 சதவீத அரசு மானியத்துடன், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விரும்பும் விவசாயிகள், வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை தொடர்புகொள்ளும்படி மாவட்ட கலெக்டர் சுப்பையன் கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்கும் விதமாக, இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதற்காக, தேசிய வேளாண் வளர்ச்சித்

திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டுக்கு, அரசிடமிருந்து ஒரு கோடியே, 17 லட்சத்து, 70 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்துடனும், இதர விவசாயிகளுக்கு, 40 சதவீத மானியத்துடன், வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது.கதிரடிக்கும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், நெல் நடவு இயந்திரம், உழவு இயந்திரம், பவர் டில்லர், ரோட்டவேட்டர், விசை தெளிப்பான், தட்டை வெட்டும் கருவி, குழிதோண்டும் கருவி, வைக்கோல் கட்டும் கருவி உள்ளிட்ட, 241 வகையான வேளாண் கருவிகள், இத்திட்டத்தின் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.வேளாண் இயந்திரங்கள் வாங்க விரும்பும் விவசாயிகள், விண்ணப்பத்துடன், இரண்டு ஃபோட்டோ, நிலங்களுக்கான வரைபட நகல், சிட்டா, அடங்கல், ஜாதி சான்றிதழ், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், விலைப்புள்ளி ஆகியவற்றுடன் தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டையில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.பரிசீலனைக்கு பின் தகுதியுடைய விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வாங்க அனுமதி வழங்கப்படும். என்று அதில் தெரிவித்துள்ளார்.

## <u>கோழி வளர்ப்பு பண்ணைகூடுதல் இயக்குனர் ஆய்வு</u>

நத்தம்:நத்தம் வட்டாரத்தில் உள்ள கோழிவளர்ப்பு திட்ட பண்ணைகளை மாநில கால்நடை பராமரிப்புத்துறையின் கூடுதல் இயக்குனர் ஆய்வு செய்தார். தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கறிக்கோழி மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டம் மூன்று ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.நத்தத்தில் பரளி, பரளிபுதூர், லிங்கவாடி, ஒடுகம்பட்டி, கோட்டையூர், சின்னையம்பட்டியில் உள்ள கோழிப்பண்ணைகளை கூடுதல் இயக்குனர் டாக்டர் மகேந்திரன் ஆய்வு செய்தார். கால்நடை மருந்தக கட்டடங்களின் பணிகளை

பார்வையிட்டார். மாவட்ட இணை இயக்குனர் விக்டர் ஜெயராஜ், திண்டுக்கல், பழநி கோட்ட உதவி இயக்குனர்கள் ராஜேந்திரன், ராமசாமி, நத்தம் வட்டார கால்நடை டாக்டர்கள் பாலமுருகன், வெங்கடேஸ்வரலு, காயத்ரி, செந்தில் உடனிருந்தனர்.

**<u>நிறைந்தன கிணறுகள் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

குஜிலியம்பாறை:கூம்பூர் ஊராட்சியில் விவசாய கிணறுகள் நிறைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குஜிலியம்பாறை ஒன்றிய விவசாயிகள் மானாவாரி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். விவசாய கிணறுகளுக்கும் போதிய தண்ணீர் வரத்து கிடைத்துள்ளது. கூம்பூர் ஊராட்சி சின்னக்குளம் பகுதியில் வரத்து வாய்க்கால் சரிசெய்து தண்ணீரை தேக்கியதால் 2 கி.மீ., தொலைவு வரை நீர்பிடிப்பு ஏற்பட்டுள்ளது. நாகுல்பட்டி, மேட்டுப்பட்டி, வால்நாயக்கனூர் பகுதிகளில் விவசாய போர்வெல்கள், கிணறுகளுக்கு நீர் வரத்து கிடைத்துள்ளது.வால்நாயக்கனூர் பகுதியில் உள்ள 90 சதவீத விவசாய கிணறுகள், நிறைந்து தண்ணீர் மடை வழியே வெளியேறி வருகிறது. இப்பகுதி விவசாயிகள் கடலை, வெங்காயம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

**<u>மழை கைகொடுத்ததால் புத்துயிர் பெற்ற விவசாயம்</u>**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவை விட, நடப்பாண்டு 100 மி.மீ., கூடுதலாக பெய்துள்ளதால், விவசாயிகள் ஆர்வமுடன் விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் நடப்பாண்டு விவசாயிகள் அதிக மகசூல் பெற வாய்ப்பு உள்ளதாக, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகராசன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டு 1.19 லட்சத்து 400 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டு சராசரி மழையளவு 827 மி.மீ., ஆகும். நடப்பாண்டு டிசம்பர் வரை 100

மி.மீ., மழை கூடுதலாக பெய்துள்ளது. சமீபத்தில் பெய்த மழையால் பொதுப்பணித்துறைக்குட்பட்ட 623, யூனியனுக்குட்பட்ட 1,336 கண்மாய்களில் 50 சதவீதத்திற்கும் மேல் தண்ணீர் நிரம்பியுள்ளது. பெரிய கண்மாயை பொறுத்தவரை 3 அடி உயரத்தில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதன் மூலம் ஆயிரம் எக்டேருக்கு மேல் பயிர்கள் பாசன வசதி பெறும். திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் 30 முதல் 75 நாட்கள் வரை நெல் பயிர் நன்றாக விளைந்துள்ளது. ஆனால், முதுகுளத்தூர், கமுதி, கடலாடி பகுதி களில் தாமதமாக விவசாயிகள் நடவு பணியில் ஈடுபட்டதால், இப்பகுதியில் இன்னும் மழை பெய்தால் தான் இந்த பயிர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். கடந்தாண்டை விட, சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், குதிரைவாலி போன்ற சிறுதானிய பயிர்களின் சாகுபடி பரப்பளவு ஆயிரம் எக்டேருக்கு மேல் அதிகரித்துள்ளது. சமீபத்தில் பெய்த மழையால் கடந்த 3 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு இருந்த விவசாய தொழில் புத்துணர்வு பெற்றுள்ளது. நடப்பாண்டு விவசாயிகளுக்கு எதிர்பார்த்தபடி மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## 2.5 ஏக்கர் பரப்பில் திருந்திய நெல்சாகுபடி:110 நாட்களில் அறுவடைக்கு தயார்

விருதுநகர்:ஸ்ரீவி.,விவசாயி சந்திரன் ஏ.ö Œங்குளத்தில் 2.5 ஏக்கர் பரப்பில் திருந்திய நெல்சாகுபடியில் இயந்திர முறையில் நெல் நடவு செய்துள்ளார்.வேளாண்துறையின் விரிவாக்க சீரமைப்பு திட்டம் பண்ணைப்பள்ளியின் கீழ் இதற்காக இவருக்கு 29,414 ரூபாய் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.அவர் கூறுகையில், "நவ.,7ல் பாய் நாற்றங்கால் விரிக்கப் பட்டது. அதன் தொடர்ச்சியாக நவ.,23ல் இயந்திரம் மூலம் 22 செ.மீ., இடைவெளிவிட்டு அம்பை 16 வகை நெல் நடவு செய்யப்பட்டது. அதிகபட்சமாக 110 நாட்களில் இது அறுவடைக்கு வரும். ஏக்கருக்கு 40 முதல் 45 மூடைகள் வரை கிடைக்கும்.

இச்சாகுபடியால் வேலையாட்கள், உரம் என அனைத்து வகையிலும் செலவு குறையும். பெருமளவு நீர்மிச்சப்படும்,"என்றார். அவரது வயலை நேற்று வேளாண் இணை இயக்குனர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்)செல்வம் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கறுப்பு, வெள்ளை நிறத்தில் தக்காளி உற்பத்தி செய்து சீன விவசாயி சாதனை**



தக்காளி காயாக இருந்தால் பச்சை நிறத்திலும், பழமாக இருந்தால் சிகப்பு நிறத்திலும் இருக்கும். ஆனால் முதன்முதலாக சீனாவில் உள்ள விவசாயி தக்காளி கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். தக்காளியின் விதையில் இண்டிகோ ரோஸ் என்னும் விதையை கலந்து உருவாக்கிய புதிய விதையின் மூலம் இந்த சாதனையை செய்ததாக அவர் கூறியுள்ளார். மேலும் அவர் கூறியதாவது : - இத்தக்காளியின் சுவையும் மாறுபட்டதாக இருக்கும். தக்காளியை வேறு சில நிறங்களில் உற்பத்தி செய்ய நான் முடிவு செய்திருக்கின்றேன். இந்த தக்காளி தற்போது சீன சந்தையில் நன்றாக விலை போகின்றது. ஒரு கிலோ ரூ.360 வரை இந்த தக்காளி விற்பனையாகின்றது. என அந்த விவசாயி கூறியுள்ளார்.

**35 பேருக்கு இலவச ஆடுகள்**

தண்டராம்பட்டு, : தண்டராம்பட்டு அடுத்த சே.கூடலூர் கிராமத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு தமிழக அரசு சார்பில்

இலவச ஆடுகள் வழங்கும் விழா நேற்று காலை நடந்தது. ஊராட்சி மன்ற தலை வர் சரவணன் தலைமை தாங்கினார். துணைத்தலை வர் பாக்கியம் நெப்போலி யன், கால்நடை மருத்துவர் முரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிராம நிர்வாக அலுவலர் தங்கராஜ் வரவேற்றார். விழாவில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள 35 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள 4 ஆடுகள் மற்றும் கொட்டகை அமைக்க ரூ.2 ஆயிரம் என ரூ.12 ஆயிரத்தை ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் வழங்கினார். இதில் வார்டு கவுன்சிலர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி செயலாளர் சேகர் நன்றி கூறினார்.

## <u>கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.12.76 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை</u>

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.12.76 லட்சத்திற்கு 190 குவின்டால் மஞ்சள் விற்பனையானது. கடந்த ஏலத்தை காட்டிலும் மஞ்சள் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள், வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் 150 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 40 குவின்டாலும் என மொத்தம் 190 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை பூலுவபட்டி, ஆலாந்துறை, செம்மேடு பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.5,699 முதல் ரூ.7,109 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.6,369 முதல் ரூ.6,587 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.6,800. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.6,400. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள்

கொள்முதல் செய்தனர். விற்பனை மொத்த மதிப்பு ரூ.12.76 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.2.50 லட்சம் அதிகமாகும். அதே போல், விரலி மஞ்சள் சராசரி விலை குவின்டாலுக்கு ரூ.400ம், கிழங்கு மஞ்சள் ரூ.900 அதிகரித்துள்ளது. கடந்த ஏலத்தை விட மஞ்சள் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி

உடுமலை, : உடுமலை வட்டார வேளாண்மைத் துறை சார்பில் எலையமுத்தூர் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நெல் பயிரில் பண்ணைப்பள்ளி நடத்தப்பட்டது. இப்பண்ணைப் பள்ளியானது தொடர்ந்து நெல் பயிரில் அனைத்து நிலைகளிலும் 6 கட்டமாக நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது பயிரின் ஒவ்வொரு நிலைகளிலும் விவசாயிகளுக்கு தேவையான பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் துறையின் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. எலையமுத்தூர் கிராமத்தில் விவசாயி செல்லமுத்து தோட்டத்தில் நடத்தப்பட்ட பயிற்சியில் உடுமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம் தலைமை தாங்கி நவீன தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார். தொடர்ந்து விவசாயிகளின் அனைத்து சந்தேகங்களுக்கும் அவர் பதில் அளித்தார். இதில் அமராவதி விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உமாசங்கரி, ரம்யா ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் சங்கர் கணேஷ் நன்றி கூறினார்.

## 91 பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கல்

துறையூர், : துறையூரை அடுத்த சிங்களாந்தபுரம் ஊராட்சியில் இலவச ஆடுகள் வழங்கும் நிகழ்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு எம்எல்ஏ

இந்திராகாந்தி தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் நடராஜன், ஒன்றிய கவுன்சிலர் கலைச்செல்வி துரைராஜ் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி வரவேற்றார். நிகழ்சியில் கைம்பெண், மாற்றுத்திறனாளிகள் உள்பட 91 பேருக்கு ஆடுகளை எம்எல்ஏ இந்திராகாந்தி வழங்கி பேசினார். நிகழ்சியில் கால்நடை மருத்துவர் குனசேகரன் துணைத் தலைவர் ராஜதுரை, ஒன்றிய செயளாளர் சேனைசெல்வம், சிஎம்எஸ் தலைவர் மோகன்தாஸ், ஊராட்சி உறுப்பினர்கள் முருகதுரை, தங்கம்மாள், பாக்கியசெல்வி உள்பட பலர் கலந்துகொண்டனர். உதவிஇயக்குனர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

<u>**வேளாண் அதிகாரிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி**</u>

அரியலூர், : தா.பழூர் அருகே நிலக்கடலையில் அதிக மகசூல் பெறம் தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விளக்க, வேளாண் உதவி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் மற்றும் நிலக்கடலை ஆராய்சி இயக்குனரகம் ஆகியவற்றின் சார் பில், அரியலூர் மாவட்ட வேளாண் உதவி அதிகாரிகளுக்கு நிலக்கடலையில் உள்ள தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு தெரியப்படுத்தும் வகையில் தொழில் நுட்ப பயிற்சி சோழமாதேவியில் நேற்று நடைபெற்றது. பயிற்சியினை மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் குணசேகரன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர்கள் ராஜா ஜோஸ்லின், ராஜ்கலா மற்றும் உமாசந்திரா ஆகியோர் நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் பூச்சி தாக்குதல் இருந்து கட்டுப்படுத்துவது குறித்தும், நிலக்கடலையில் மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது குறித்தும் விவசாயிகளுக்கு கருத்துக்கள் வழங்கினர். இப்பயிற்சியில் அரியலூர், திருமானூர், தா.பழூர்,

ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த 20 வேளாண் உதவி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கறம்பக்குடி வட்டாரத்தில் இறவை நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவது எப்படி?

கறம்பக்குடி, : புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டாரத்தில் இறவை நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவது எப்படி? என்பது குறித்து வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் யோசனை தெரிவித்துள்ளார். கறம்பக்குடி வட்டாரத்தில் விவசாயிகள் தற்போது இறவை நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இதில் அதிக மகசூலை உருவாக்க கீழ்க்கண்ட ஆலோசனைகளை கடைபிடிக்க வேண்டும். இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூல் கிடைக்க பயிர் எண்ணிக்கை முக்கியமான காரணியாகத் திகழ்கிறது. பயிர் எண்ணிக் கை நிலக்கடலையில் சரியாக பராமரிக்கப்படவில்லை எனில் விவசாயிகள் எவ்வளவு உரம் இட்டாலும், செலவு செய்தாலும் எதிர்பார்க்கும் மகசூல் கிடையாது. எனவே பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரிக்க விதைக்கு விதை இடைவெளிவிட்டு விதைப்பது அவ சியம். மேலும் வரிசைக்கு வரிசை 1 அடியும், செடிக்குசெடி 10செ.மீட்டர் இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். விதைக்கப்படும் விதை 4 செ.மீ. ஆழத்துக்கு கீழ் சென்றுவிடக் கூடாது. இறவை நிலக்கடலை விதைப்பில் ஏறுக்குப் பின் விதைப்புச் செய்யும் போது அனுபவம் உள்ள ஆட்களை கொண்டு சரியான இடைவெளியில் விதைகள் விழுமாறு விதைப்பு செய்ய வேண்டும். நிலக்கடலை விதைக்கும் போது 1 சதுர மீட்டருக்கு 33 கடலை செடிகள் கிடைக்கும். இதனை எளிதாக கண்டுபிடிக்க 1 பெரிய சைக்கிள் டயருக்குள் 11 செடிகள் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும். பயிர் எண்ணிக்கையை சீராக பராமரிக்க தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும். தேவையான அளவு விதைப்பருப்பை (1 ஏக்கருக்கு 5055 கிலோ) பயன்படுத்த

வேண்டும். தூய்மையான திரட்சியான பூச்சி நோய் தாக்காத பொறுக்கு விதைகளை பயன்படுத்த வேண்டும். மேலும் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நிலத்தை தயார் செய்யும் போது தனிக்கவனம் செலுத்தி நன்கு சமன் செய்ய வேண்டும். நிலக்கடலையில் 2ம் களை எடுக்கும் தருணமான 45ம் நாள் 80 கிலோ(கி) ஜிப்சம் 1 ஏக்கருக்கு இட்டு மண் அமைத் தால் கடலை திரட்சியாகி மகசூல் கூடுதலாக கிடைக்கும். கறம்பக்குடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் இறவை நிலக்கடலையில் மேற்கண்ட வழிமுறைகளை தவறாமல் கடைப்பிடித்து வந்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பொங்கல் பண்டிகையையொட்டி ஈரோட்டில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரம்</u>**



ஈரோடு பொங்கல் பண்டிகையையொட்டி ஈரோட்டில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

<u>பொங்கல் பண்டிகை</u>

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை அடுத்த மாதம் (ஜனவரி) 14–ந் தேதி சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை அன்று பொதுமக்கள் புதுப்பானையில், புத்தரிசி இட்டு பொங்கல் வைப்பது வழக்கம். சர்க்கரை பொங்கலுக்கு பொதுமக்கள் அச்சுவெல்லம் மற்றும் உருண்டைவெல்லத்தை பயன்படுத்தி வருகிறார்கள். அதனால் பொங்கல்

பண்டிகையையொட்டி அச்சுவெல்லம் மற்றும் உருண்டை வெல்லம் அதிக அளவில் விற்பனையாகும். அதற்காக ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் அச்சுவெல்லம் மற்றும் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. ஈரோடு முள்ளாம்பரப்பில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது.

<u>உருண்டை வெல்லம்</u>

இதுகுறித்து உருண்டை வெல்லம் தயாரிக்கும் தொழிலாளி பூபதி கூறியதாவது:–

நாங்கள் உருண்டை வெல்லம் தயாரிக்க தேவையான கரும்புகளை கோபிசெட்டிபாளையம், சித்தோடு, மொடக்குறிச்சி போன்ற பகுதிகளில் இருந்து வாங்கி வருகிறோம். தற்போது ஒரு டன் கரும்பு ரூ.1,800 முதல் ரூ.2 ஆயிரம் வரை விலை கொடுத்து வாங்குகிறோம். முதலில் கரும்பில் இருந்து சாறு எடுத்து அதை ஒரு பெரிய அளவிலான கொப்பரையில் ஊற்றுவோம். பின்னர் கொப்பரையை அடுப்பில் வைத்து நன்கு சூடேற்ற வேண்டும். அப்போது கரும்புச்சாற்றில் இருந்து பாகு உண்டாகும். அந்த பாகுவை பாத்திரத்தில் ஊற்றி ஆறவைக்க வேண்டும். பின்னர் அதை ¼ கிலோ மற்றும் ½ கிலோ அளவுக்கு உருண்டைகளாக பிடிக்க வேண்டும்.

ஒரு டன் கரும்பில் இருந்து 100 கிலோ முதல் 110 கிலோ வரை உருண்டை வெல்லம் தயாரிக்க முடியும். ஒரு சிப்பம் (30 கிலோ) ரூ.950 முதல் ரூ.1,000 வரை விற்பனை செய்யப்படுகிறது. நாங்கள் ஒரு நாளைக்கு 100 முதல் 150 சிப்பம் வரை உருண்டை வெல்லம் தயாரித்து வந்தோம். தற்போது பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால் ஒரு நாளைக்கு 300 முதல் 400 சிப்பம் வரை உருண்டை வெல்லம் தயாரித்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 2-ம் போக பாசனத்துக்காக காலிங்கராயன் வாய்க்காலில் இருந்து தண்ணீர் திறப்பு



பவானி

2-ம் போக பாசனத்துக்காக காலிங்கராயன் வாய்க்காலில் இருந்து தண்ணீரை கலெக்டர் பிரபாகர் திறந்து வைத்தார்.

காலிங்கராயன்வாய்க்கால்

பவானிசாகர் அணையில் இருந்து காலிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களுக்கு ஆண்டுதோறும் 2-ம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். ஏற்கனவே முதல் போக பாசனம் முடிவடைந்ததை தொடர்ந்து 2-ம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு முதல்-அமைச்சருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட முதல்-அமைச்சர் ஒ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து நேற்று காலிங்கராயன் வாய்க்காலில் இருந்து 2-ம் போக பாசனத்துக்கு தண்ணீர்திறந்துவிடப்பட்டது.

தண்ணீர்திறப்பு

நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பிரபாகர் கலந்துகொண்டு, மதகுகளை இயக்கி தண்ணீரை திறந்து விட்டார். அப்போது நுங்கும் நுரையுமாக தண்ணீர் சீறிப்பாய்ந்து சென்றது. தண்ணீருக்கு அனைவரும் மலர் தூவினார்கள். முதல் கட்டமாக 200 கனஅடி திறந்து விடப்பட்டு உள்ளது. இந்த தண்ணீர் படிப்படியாக 600 கனஅடி வரை அதிகரிக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வாய்க்கால் பாசனம் மூலம் பவானி, கொடுமுடி, கரூர் வரை உள்ள 18 ஆயிரத்து 764 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் ஆர்.என்.கிட்டுசாமி

எம்.எல்.ஏ., மேயர் மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிச்சாமி, மண்டல தலைவர்கள் மனோகரன், கேசவமூர்த்தி, காஞ்சனா, சித்தோடு பேரூராட்சி தலைவர் வரதராஜன், ஈரோடு ஒன்றியக்குழு தலைவர் கண்ணம்மாள் முத்துசாமி, ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி, துணைத்தலைவர் சுப்பிரமணியம், ஈரோடு ஒன்றிய ஜெயலலிதா பேரவை செயலாளர் சரவணன், அ.தி.மு.க. பிரமுகர்கள் உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**பூக்கள் விலை கடும் உயர்வு பூக்கள் விலை கடும் உயர்வு**



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.1,600–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூமார்க்கெட்

குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு குமரி மாவட்ட பூ வியாபாரிகள் மட்டுமல்லாமல், கேரள வியாபாரிகளும் வந்து பூக்களை வாங்கி செல்கிறார்கள். தோவாளை பூ மார்க்கெட்டுக்கு குமரி மாவட்டம் மட்டுமல்லாமல் நெல்லை, மதுரை, உள்பட பல ஊர்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

மல்லிகைகிலோரூ.1,600

தோவாளை பூ மார்க்கெட்டில் வழக்கத்திற்கு மாறாக நேற்று பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. நேற்று முன்தினம் ரூ.1,200–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மல்லிகைப்பூ நேற்று ரூ.1,600–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே போல் பிச்சி ரூ.625–ல் இருந்து 800–ஆகவும், கனகாம்பரம் ரூ.300–ல் இருந்து 350 ஆகவும் உயர்ந்தது.

மற்ற பூக்கள் விலை கிலோவுக்கு வருமாறு:– முல்லை ரூ.600, சம்பங்கி ரூ.200, பட்டன் ரோஸ் ரூ.150, கொழுந்து ரூ.150, வாடாமல்லி ரூ.80, கேந்தி ரூ.60, கோழிப்பூ ரூ.60, மரிக்கொழுந்து ஒரு கட்டு ரூ.200, ஸ்டெம்பு ரோஸ் ஒரு கட்டு ரூ.180–க்கும் விற்பனை செய்யப்பட்டன. பூக்களின் விலை உயர்வு குறித்து வியாபாரி விஸ்வநாதன் கூறும்போது, ''கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்குவதால், பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. ஆகவே பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது'' என்றார்.

## இரண்டாம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு 9 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது



கிருஷ்ணகிரி அணையில் இருந்து இரண்டாம் போக சாகுபடிக்காக தண்ணீரை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் நேற்று காலை திறந்து வைத்தார். இதன்மூலம் கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டணம் ஒன்றியங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 12 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறு கிறது.

கிருஷ்ணகிரிஅணை

கிருஷ்ணகிரி அணையில் இருந்து 2-ம் போக சாகுபடிக் காக தண்ணீர் திறக்க வேண் டும் என அணை பாசன விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று அணையில் இருந்து தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டி ருந்தது. அதன்படி நேற்று காலை 10.45 மணிக்கு அணையில் இருந்து தண்ணீரை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு முன்னாள் எம்.எல்.ஏ. கோவிந்தராஜ், பொதுப்பணித்துறை கண் காணிப்பு பொறியாளர் பால சுப்பிரமணியம், செயற்பொறி யாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோர்

முன்னிலை வகித் தனர். அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்ட வுடன் கால்வாயில் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. அப்போது கலெக்டர் உள்ளிட்ட அதிகாரி கள் மற்றும் மக்கள் பிரதிநிதி கள் மலர் தூவிவாழ்த்தினார்கள்.

9ஆயிரம்ஏக்கர்

நிகழ்ச்சியின்போதுகலெக்டர்கூறியதாவது:-

அணையின் இடது மற்றும் வலதுபுற பிரதான கால்வாய் களில் 2-ம் போக சாகுபடிக்காக இன்று (நேற்று) முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் தற் போது உள்ள நீர் அளவைக் கொண்டும், எதிர்வரும் பருவ மழையால் வரும் நீர்வரத்தை எதிர்நோக்கியும் இடதுபுற கால்வாய் மூலம் 80 கன அடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கன அடி தண்ணீரும் என வினாடிக்கு 155 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள பெரிய முத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வர மடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டி அள்ளி, நாகோஜன அள்ளி, ஜனப்பரஅள்ளி, பையூர் ஆகிய 16 ஊராட்சிகளில் உள்ள பல்வேறு கிராமங்களில் 9 ஆயிரத்து 12 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறு கிறது. சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். தற்போது அணையின் மொத்த உயரமான 52 அடி யில் 49.90 அடி தண்ணீர் உள்ளது. எனவே விவசாயத் திற்கு மக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டும். நீர் பங்கீட்டு பணிகளில் பொதுப்பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண் டும். அறிவிக்கப்பட்ட நாளுக்கு பிறகு எக் காரணத்தை கொண்டும் பாசனத்திற்கு கால நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்கப்படமாட் டாது என கலெக்டர் தெரி வித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பால சுப்பிரமணியன், வருவாய் கோட்டாட்சியர் சாந்தி, ஆவின் தலைவர்

தென்னரசு, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் அர்ச்சுனன், மாவட்ட கவுன்சிலர் சி.வி.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ், உதவி பொறியாளர் பிரபு உள் பட பலர் கலந்து கொண் டனர்.

**<u>தனுஷ்கோடி கடல் பகுதியில் 150 கிலோ எடை கொண்ட அரிய வகை சூரியன் மீன் சிக்கியது</u>**



தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன் பிடித்த போது மீனவர்களின் வலையில் 150 கிலோ எடை கொண்ட அரிய வகை சூரியன் மீன் சிக்கியது.

அரியவகைமீன்

ராமேசுவரம் அருகே பாம்பன் பகுதியில் இருந்து ஒரு நாட்டுப்படகில் 4 மீனவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றனர். நடுக்கடலில் இரவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது வலையில் மாவுலா, முரல் உள்ளிட்ட பல மீன்களுடன் பெரிய அளவிலான ஒரு மீன் சிக்கியது. பெரிய மீன் கிடைத்த மகிழ்ச்சியில் 4 மீனவர்களும் சேர்ந்து கஷ்டப்பட்டு வலையை படகில் தூக்கி பார்த்தனர். அப்போது இதுவரையிலும் பிடிபடாத அரிய வகை மீனாக இருந்ததுடன் சுமார் 150 கிலோ எடையும்4 அடி நீளம், 4அடி அகலமும் கொண்ட வால் பகுதி இல்லாத வட்ட வடிவிலான மீன் என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து இந்த அரியவகை மீனை மீனவர்கள் நேற்று பாம்பன் கடற்கரைக்கு கொண்டு வந்தனர். இந்த மீன் பற்றி தகவல் அறிந்து ஏராளமான மீனவர்கள் கடற்கரைக்கு வந்து ஆச்சர்யத்துடன் பார்த்துச் சென்றனர்.

அபூர்வமானது

இதுபற்றி 40 வருடமாக மீன்பிடி தொழில் செய்து வரும் பாம்பனை சேர்ந்த மீனவர் ஒருவர் கூறுகையில், 'மன்னார் வளைகுடா பகுதியில் பல

வகையான மீன்கள் உள்ளன. ஆனால் தற்போது பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் சிக்கி இருக்கும் மீனானது சூரியன் மீன் என்றழைக்கப்படும். வால் பகுதியே இல்லாமல் மீன்களின் செதில்களும் சிறிய அளவில் இருப்பதுடன் வட்ட வடிவில் மிகவும் அழகாக இருக்கும். இந்த மீன் வலையில் சிக்குவது மிகவும் அரிது. பொதுவாக சூரியன் மீன்5 கிலோவில் இருந்து 10 கிலோ வரை தான் பார்த்துள்ளோம். ஆனால் இந்த சூரியன் மீனோ சுமார் 150 கிலோ எடைகொண்டதாக உள்ளது. இதுபோன்று அதிக எடையில் சூரியன் மீன் கடலில் பார்ப்பதே மிகவும் அபூர்வம். சூரியன் மீன் மிகவும் ஆழ் கடல் பகுதியில் வசிக்கக் கூடியது. கடலில் உள்ள தட்பவெப்ப நிலை மாற்றத்தினால் ஆழ்கடல் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தனுஷ்கோடி கடல் பகுதிக்கு வந்திருக்கலாம். இவ்வாறுஅவர்கூறினார்.

வலைசேதம்

அதிக எடையில் வலையில் சிக்கிய சூரியன் மீனால் அதை பிடித்து வந்த மீனவர்களின் ரூ.50ஆயிரம் மதிப்புள்ள வலை முழுமையாக சேதமடைந்தது. ஆனால் சூரியன் மீனோ நல்ல விலைக்கு போகாமல் மிகக் குறைந்த விலைக்கு ஒரு கம்பெனியில் கருவாடாக்குவதற்காக கொடுக்கப்பட்டது.

## <u>ஊட்டியில் தேயிலை சுற்றுலா விழா 3 நாட்கள் நடக்கிறது</u>



ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் இடையே தேயிலை குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேயிலை சுற்றுலா விழா 3 நாட்கள் நடத்தப்படஉள்ளது.

தேயிலைவிவசாயம்

நீலகிரி மாவட்டத்தின் முது கெலும்பாக தேயிலை விவ சாயமும், சுற்றுலாவும் விளங்கு கின்றன. மாவட்டத் தில் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் உள்ளனர். இவர்கள் பச்சை தேயிலை மூலம்

கிடைக்கும் வருமானத் தையே நம்பி உள்ளனர். இந்த நிலையில் நீலகிரிக்கு ஆண்டுதோறும் சுமார் 20 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். எனவே சுற் றுலா பயணிகள் இடையே தேயிலை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தேநீர் குடிப்ப தால் ஏற்படும் நன்மை கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டு தோறும் தேயிலை சுற்றுலா விழா ஊட்டியில் நடத்தப்பட்டு வருகிறது.

மேடைஅமைக்கும்பணி

இந்த ஆண்டு தேயிலை சுற் றுலா விழா ஊட்டி மலைப் பகுதி மேம்பாட்டு திட்ட திறந்தவெளி மைதானத்தில் வருகிற 26-ந்தேதி தொடங்கி 28-ந்தேதி வரை நடக்கிறது. இதன் தொடக்க விழாவிற்கு மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை தாங்குகிறார். விழாவை தமிழக சுற்றுலா துறை செயலாளர் கண்ணன் தொடங்கி வைக்கிறார். இதில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பல வாணன், மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டி யன் உள்பட பலர் கலந்து கொள்கின்றனர். இதற்காக மைதானத்தில் மேடை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தேநீர் தயாரிக்கும் போட்டி ஊட்டியில் 3 நாட்கள் நடை பெறும் இந்த விழாவில் சுற்றுலா பயணிகளுக்கு தேநீர் தயாரித்தல் போட்டி, ஓவிய போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இதுதவிர பல்வேறு தேயிலை தொழிற்சாலைகள் தங்களது தேயிலை தூள் தயாரிப்புகளை சுற்றுலா பய ணிகள் பார்வைக்காக வைக்க உள்ளனர். மேலும் தேயிலை வாரியம் சார்பில் பல்வேறு வகையான தேயிலை தூள்கள், அவற்றின் பயன்பாடுகள், நன்மைகள் குறித்தும் காட் சிக்கு வைக்கின்றனர். இது தவிர சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தோடர், கோத்தர் உள்ளிட்ட பழங்குடி யின மக்களின் பாரம்பரிய நடனங்கள், கலை நிகழ்ச்சிகள், பரத நாட்டியம் உள்ளிட்டவை களும் நடைபெற உள்ளது.

**விலையில்லா கறவை மாடுகள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு தினசரி 10 ஆயிரம் லிட்டர் பால் கிடைக்கிறது கலெக்டர் கணேஷ் பேச்சு**



புதுக்கோட்டை மாவட்டத்தில், விலையில்லா கறவை மாடுகள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு தினசரி 10 ஆயிரம் லிட்டர் பாலை பயனாளிகள் வழங்கி வருகின்றனர் என்று கலெக்டர் கணேஷ் கூறினார்.

திருமணஉதவித்தொகை

அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த பத்தாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு தமிழக அரசின் திருமண உதவி திட்டத்தில் ரூ.25 ஆயிரம் திருமண உதவி மற்றும் 4 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கும் விழா அறந்தாங்கியில் நடந்தது. விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கி அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களை சேர்ந்த 417 பயனாளிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.1 கோடியே 4 லட்சத்து 25 ஆயிரம் திருமண உதவி தொகைக்கான காசோலைகள், தலா 4 கிராம் வீதம் 417 பேருக்கு ரூ.42 லட்சம் மதிப்பிலான 1668 கிராம் தங்க நாணயங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- தினசரி 10 ஆயிரம் லிட்டர் பால்

தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை ரூ.60 கோடி மதிப்பில் தாலிக்கு தங்கம் மற்றும் திருமண உதவி தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் இதுவரை 66 ஆயிரம் வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வெள்ளாடுகள் தற்போது ஏறத்தாழ இரண்டு மடங்காக அதாவது 1 லட்சத்து 15 ஆயிரம் ஆடுகளாக பெருகியுள்ளது.

இதேப்போல தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் ஆண்டுக்கு 3 ஆயிரம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் விலையில்லா கறவை மாடுகள் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு தினசரி 10 ஆயிரம் லிட்டர் பாலை பயனாளிகள் வழங்கி வருகின்றனர்.

நான்காவதுகட்டமாக...

விலையில்லா வெள்ளாடு மற்றும் கறவை மாடுகள் மூலம் பயனாளிகளுக்கு வருவாய் கிடைத்து வருகிறது. இதேப்போல தமிழக அரசின் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி போன்றவை நான்காம் கட்டமாக விரைவில் வழங்கப்பட உள்ளது. இவ்வாறுஅவர்பேசினார்.

அதிகாரிகள்

விழாவில் ராஜநாயகம் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. அரசன், அறந்தாங்கி ஒன்றியக்குழு துணை தலைவர் பெரியசாமி, அறந்தாங்கி கூட்டுறவு நகர வங்கி தலைவர் சிவசண்முகம், கோட்டைப்பட்டினம் கூட்டுறவு வங்கி தலைவர் அலி அக்பர், ஆவுடையார்கோவில் அட்மா தலைவர் கூத்தையா, ஒன்றிய கவுன்சிலர் செல்லக்கண்ணு, ஆவுடையார்கோவில் கூட்டுறவு நிலவள வங்கி துணை தலைவர் லியாகத் அலி ஆகியோர் பேசினர். முன்னதாக அறந்தாங்கி ஒன்றிய ஆணையர் ஜானகிராமன் வரவேற்றார். விழாவில் மாவட்ட சமூகநல அலுவலர் அன்னபூரணி, அறந்தாங்கி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர் சங்கிலிமுத்து கருப்பையா, மாவட்ட, ஒன்றிய, நகரசபை கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகிகள், அ.தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>தொடர்மழை காரணமாக இந்த ஆண்டு நெல் விவசாயம் அமோகமாக இருக்கும் விவசாய அதிகாரிகள் தகவல்</u>



ராமநாதபுரம் மாவட்டத் தில் இந்த ஆண்டு தொடர் மழை காரண மாக நெல் விவசாயம் அமோகமாக இருக்கும் என்று விவசாய அதிகாரி கள் கருத்துதெரிவித்துள்ளனர்.

பருவமழை

கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துப் போன ராமநாதபுரம் மாவட் டத்தில் இந்த ஆண்டு வட கிழக்கு பருவமழையும், அதற்கு முந்தைய மழையும் நன்றாக பெய்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தின் ஆண்டு சரா சரி மழையளவான 827 மில்லி மீட்டரை காட்டிலும் இந்த ஆண்டு இதுவரை 928 மில்லி மீட்டர் மழை பெய் துள்ளது. வடகிழக்கு பருவ மழை இதுவரை 612.27 மில்லி மீட்டர் பெய்துள்ளது. இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள மொத்த நெல் பாசன பரப்பான ஒரு லட்சத்து 28 ஆயிரம் எக்டேரில் இந்த ஆண்டு இதுவரை 1 லட்சத்து 19 ஆயிரத்து 400 எக்டேரில் நெல் விவசாயம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பயிர்கள் 30 முதல் 75 நாள் பருவத்தில் உள்ளன. ஆர்.எஸ்.மங்கலம், திருவா டானை பகுதிகளில் நெற் பயிர்கள் கதிர் விடும் நிலை யில் உள்ளது. மாவட்டத்தில் பெரிய கண்மாயை பயன்ப டுத்தி மொத்தம் 3,962 ஏக்கர் நெல் விவசாயம் செய்யப்படு வது வழக்கம். இதில் மழையை பயன் படுத்தி ஏற்க னவே நேரடி நெல் விதைப்பு மூலம் 1440 ஏக்கர் நெல் விவ சாயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கண்மாயில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி மேலும் 1345 ஏக்கரில் நெல் விவசாயம் செய்யப்பட்டுள் ளது. அதிகம் பேர் விவசாயம் மேற்கொண்டதால் இந்த ஆண்டு அதிகளவில் யூரியா உரம் விற்பனையாகி உள்ளது. இதனால் யூரியாவுக்கு தட்டுப் பாடு ஏற்பட்டது. இருப்பினும் விவசாயிகள் யூரியாவை குறைந்தளவு பயன்படுத்திய தால் பூச்சி தாக்குதல் குறை வாக உள்ளது. இது போன்ற நல்ல சூழ்நிலைகள் காரண மாக மாவட்டத்தில்

இந்த ஆண்டு நெல் விவசாயம் அமோகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயிர்காப்பீடு

தற்போது நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் மூலம் 60 நாள் பயிராக உள்ள நெற்பயிர்கள் அனைத்தும் நன்றாக விளைந்து விடும். தாமதமாக விதைத்து 30 முதல் 45 நாள் பயிராக உள்ள நெற்பயிர்கள் அனைத்திற்கும் இன்னும் 2 மழை தேவையானதாக இருக் கும். இந்த ஆண்டு நேரடி கொள்முதல் நிலையங்கள் ஜன வரி 2ம் வாரத்தில் தொடங்க கலெக்டர் நந்தகுமார் நடவ டிக்கை எடுத்துள்ளார். நெற் பயிர்கள் தவிர மாவட்டத்தில் 14,600 எக்டேரில் மிளகாய் சாகுபடியும், 6,000 எக்டேரில் சோளம், கம்பு, கேழ்வரகு, மக் காச்சோளம் போன்ற சிறுதா னிய பயிர்களும், 1,500 எக்டே ரில் உளுந்து, 150 எக்டேரில் பாசிப்பருப்பு, 75 எக்டேரில் துவரை, 250 எக்டேரில் தட் டைப்பயிறு, 1860 எக்டேரில் நிலக்கடலை போன்றவை சாகு படி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இந்த ஆண்டு 1 லட்சத்து 300 விவசாயிகள் ரூ.6 கோடியே 88 லட்சம் பயிர் காப்பீடு பிரீமியம் செலுத்தி உள்ளனர். ஏற்கனவே கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வருகிற ஜன வரி மாதம் அரசின் உத்தரவு வரப்பெற்றதும் இன்சூரன்சு தொகை வழங்கப்படும். இந்த தகவலை விவசாய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.